HNB GRAMEEN

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

2017 ஜனவரி – பெப்ரவரி இதழ்

தோல்விகளை கண்டு தளராமல் பெற்ற வெற்றிகள்
துன்பங்களை கண்டு தளராமல் கிடைத்த நிம்மதி
பிழைகளினால் பெற்ற அனுபவங்கள் என
எம் கடந்த 17 வருட பயணம் பிரகாரசமானது.
நிதித் துறையில் முதன்மையாவதற்கு
எமக்கு கிடைத்த உத்வேகம் அவ்வாறே,
பெற்ற அனுபவங்கள் மற்றும் வெற்றிகள் மூலம்
**நாம் புதிய ஆண்டில் கால் பதிப்போம்.**
உங்கள் அனைவருக்கும்

## 2017 ஆண்டு சுபீட்சம் மிகு ஆண்டாக அமையட்டும்.!




















## நினைப்பதற்கும் மேலானதொரு அழகிய பூமியில் நாம் வாழ்கின்றோம்.

# வாழ்க்கையின் அர்த்தம்

**2016 ஐ கடந்து சென்று 2017 ஐ அடைந்து விட்டோம். மணித்தியாலம்... நாட்கள்... கிழமைகள்.. மாதங்கள் என காலம் கடந்தோடுகின்றது. கடந்து செல்லும் காலத்தை போலவே மனிதர்களும் மாற்றமடைகின்றனர். அந்த "மாற்றம்" மூலம் வாழ்க்கையை வெற்றியை நோக்கி கொண்டு சென்ற மனிதர்கள் பலர் தொடர்பாகவே இந்த கட்டுரை. உங்களின் மாற்றத்திற்கான வழியைதேடிக்கொள்ள.**

### JAN KOUM




Jan Koum என அழைக்கப்படுபவர் வட்ஸ்- எப் எனும் சமூக வலைத்தள தயாரிப்பாளராவார். 39 வயதான இவர் தனது 16 ஆவது வயதில் யுக்ரேனிலிருந்து அமெரிக்காவுக்கு வந்தார்.அவர் அந்த நேரத்தில் வாழ்ந்தது அமெரிக்க அரசின் மூலம் அகதிகளாக வாழ்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட கூப்பன்கள் மூலமே. அந்தக் கூப்பனில் உணவை பெற்றுக்கொள்ள Jan வந்த இடத்திற்கு அருகாமையிலே இருந்த Mount View வில் தனது வட்ஸ்- அப் காரியாலயத்தை அமைக்க கிடைக்கும் என்று இந்த வறுமையானவர் எப்படித்தான் நினைத்திருப்பார் .

நிகழ்காலத்தில் உலகம் முழுவதும் 600 மில்லியன் மக்களினால் உபயோகிக்கப்படும், குறுஞ்செய்தியொன்றை அனுப்பும் பட்சத்தில் அதை பெறுனர் பெற்றுக்கொண்டாரா என அறிய இலகுான முறையில் பல சிறப்பு தரங்களுடன் தயாரிக்க Jan Koum க்கு முடிந்தது. இந்த வலையமைப்பானது 2014 ஆம் ஆண்டு பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் மூலம் 19 பில்லியன் டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இந்த கொடுக்கல் வாங்கல் நிறைவில் அமெரிக்காவின் சாதாரன ஒரு வரியவராக வாழ்க்கையை ஆரம்பித்த Jan Koumஐ பில்லியனர்கள் வரிசையில் சேர்த்துவிட்டது.

### JAK MA



தனது சிறு பராயத்தை ராசியில்லாதவராய் கழித்த Jak Ma இன்று டொலர் 20.0 ற்கு உரிமை கோரும் கோடீஸ்வரர். சீனாவின் Hangzhou பிராந்தியத்தில் பிறந்த அவருக்கு வேலைக்கு செல்வதற்கான வயது வந்தவுடன் குறைந்தது KFC யில் கூட வேலை ஒன்றை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. தேசிய பாடசாலைகான பரீட்சையில் இரு முறை தோல்வியடைந்தாலும் , அவரின் விடாமுயற்சி காரணமாக ஆங்கில ஆசிரியராக கடமையாற்றும் அளவிற்கு பிற்காலத்தில் அவர் உயர்ந்தார்.

அவர் அமெரிக்காவிற்கு 1995 இல் வந்தார். அன்றுதான் அவர் முதல் முதலாக இணையத்தைபார்த்தார். சீன உற்பத்திகளுக்கு இணையத்தில் ஒரு இடத்தை ஒதுக்க வண்டும் என்ற எண்ணத்தில் அவர் சீன மொழியினால் ஆன பல இணையத்தளங்ளை ஆரம்பித்தார். இணையத்தினுள் சீன மொழியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இணையத்தளம் தொடர்பாக இன்றும் விவாதிக்கப்பட்டுக்கொண்டிரு க்கின்றது. இருப்பினும் அந்த இணையத்தளங்கள் குறிப்பிட்ட காலத்தில் சீன எழுத்துக்கள் தொடர்பான பிரச்சனைகள் காரணத்தினால் இணையத்தில் இல்லை.

1999 ஆரம்பிக்கப்பட்ட Alibaba எனும் பெயர் கொண்ட இணையத்தளம் பொருட்கள் கொள்வனவு செய்யும் இணையத்தளம் இப்பொழுது Amazon எனும் பெயருடன் இணையத்தள விற்பனையாளராக இரு மடங்கு வாடிக்கையாளர்களை கொண்டுள்ளது. சீனாவின் தனவந்தராகவும் Jack Ma பல விருதுகளுக்கு சொந்தக்காரர் ஆகினார்.

### INGVAR KAMPRAD




7 வயது சிறுவனாக இருக்கும் போது Ingvar Kamprad வாழ்ந்தது ஸ்வீடனில் ஒரு வெளிப்பிரதேசத்தில். அவர் அக்காலத்தில் தம் அயலவர்களுக்கு தீக் குச்சிகள் விற்பனை செய்தார் . 7 வயது வரை (1920) இல் அயலவர்களுக்கு தீக் குச்சிகள் விற்பனை செய்த சின்ன பையன் பின்னர் பென்சில், வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை விற்பனை செய்ய ஆரம்பித்தார். தனது 17 ஆவது வயதில் அந்த துடிப்பு மிக்க சிறுவன் தனக்கென ஒரு நிறுவனத்தை ஆரம்பித்துவிட்டான். அதன் பெயர் IKEA (Inguvar Kamprad From Elmtaryd Agunnaryd) அவனின் பெயர் மற்றும் தான் வாழ்ந்த நகரத்தின் பெயரை உள்ளடக்கியதாய் அது அமைந்தது.21 வயதாகும் போது Kamprad தனது நிறுவனத்தின் மூலம் வீட்டுப்பாவனை பொருட்கள் விற்பனையை ஆரம்பித்தார் .அங்கு தான் IKEA வின் ராஜ்ஜியம் ஆரம்பித்தது.

இக்காலகட்டத்தில் இந்நிறுவனம் விற்பனை உலகின் பெறும் இடத்தை பெற்றுள்ளது. 42 நாடுகளில் 350 ற்கும் மேற்பட்ட கிளைகளை கொண்டுள்ளதுடன் வருடத்திற்கு 36 மில்லியன் டொலரை புரள்வாகவும் கொண்டுள்ளது. இப்படியனான போதும் அவர் இன்னும் தனது காலத்தை மிகவும் அனிமையாகவே கழிக்கின்றார். எந்த அளவுக்கு என்றால் 88 வயதாகியும் இன்னும் விமானத்தில் பயணிக்கிறார்.

### HOWARD SCHULTZ




Howarsd Schultz அவர் Starbucks நிறுவனத்தின் உரிமையாளராவார். டேப்லோயிட் பத்திரிக்கைக்கு Howard ஒரு முறை இவ்வாறு கூறினார்.

நான் வாழ்ந்தது தொடர் மாடி கட்டிட வீடொன்றில் கஷ்டமான குடும்பம் மெதுவாக காலம் கடக்க எனக்கு தோன்றியது நான் வெற்றிப்பாதையில் அல்ல செல்கின்றேன் என்று. நான் வெற்றிப்பாதையில் சென்றால் தான் வீடு , சொத்துகள், குடும்பம் என சந்தோசமாக இருக்கலாம் என யோசித்தேன். பின் எனது புதுப்பாதையை நோக்கி நான் சென்றேன். அன்று அழகாக உடை அணிந்து இருந்தாலும் என் கடந்த காலம் எனக்கு எப்பொழுதும் நினைவிலிருக்கும்.

Schultz அவரின் பட்டப்படிப்பின் பின் Xerox எனும் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தார்.சிறிது காலத்தின் பின் அங்கு அருகில் இருந்த Starbuccks எனும் பெயர் கொண்ட கோப்பி விற்பனை நிலையத்தை விலைக்கு வாங்கினார். அக்காலத்தில் 60 விற்பனை நிலையங்களில் மாத்திரமே விற்பனைக்காக இருந்தது. 1987 தனது முயற்சியினால் ஞூஉாரடவண அவ் அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் பணிப்பாளரானார். அதன் பின் தான் அவர் தனது பயணத்தை வெற்றிப்பயணமாக மாற்றிக்கொண்டார். இன்று உலகம் முழுவதும் 16000 விற்பனை நிலையங்களுக்கு மெல் starbucks கோபி விற்பனைக்குண்டு. 2014 ஆம் ஆண்டளவில் அவரில் மொத்த சொத்தின் பெறுமதி 2.1 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

### LEONARDO DET VECCHIO



Leonardodetvecchio கடந்த இரு வருடங்களுக்கு முன் 18.4 பில்லியன் டொலருக்கு சொந்தக்காரரான அவரின் கடந்த காலம் மிகவும் கசப்பானதே . அவரின் குழந்தை பருவம் சிறுவர் காப்பகத்திலேயே கழிந்தது. தனது சிறு வயதினிலேயே தந்தை இறந்து போனதால் தனது 5 குழந்தைகளை வளர்க்க முடியாமல் தாய் சிறுவர் காப்பகத்தில் சேர்த்தால். Leonardo பெரியவனானதும் ஒரு தொழிற்சாலையில் வேலைக்கு சேர்ந்தார். அங்கு ஒரு இயந்திரத்தில் கைவிரல்கள் மாட்டி விரலின் ஒரு பகுதி இல்லாமல் போனது இரும்பு அச்சுகள், வாகன உதிரிப்பாகஙங்கள், கண்ணாடிகள் என்பன அங்கு உற்பத்தி செய்யப்பட்டது. தனது 21 ஆவது வயதில் தனக்கென ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க Leonardo வினால் முடிந்தது. அந்த நிறுவனம் தான் எதிர்காலத்தில் உலகின் புகழ் பெற்ற மூக்குக்கண்ணாடி உற்பத்தியாளரானது. Ray-ban மற்றும் Oakley எனும் நாமம் கொண்ட உற்பத்திகளாகும்.

இது போன்ற பல விடயங்களை கொண்டு வந்தது தடைகளை தாண்டி வெற்றிப்பபாதையை நோக்கி நீங்களும் உங்கள் பயணத்தை தொடர்வீர்கள் என்ற நம்பிக்கையில் , உங்கள் தலைஎழுத்தையும் மாற்றும் அந்த வெற்றிப்பயணத்திற்கான காலடியை எடுத்து வைப்பீர்கள் என நினைக்கிறோம்.

**இணையத்திலிருந்தான தொகுப்பு**

# நாட்டிற்கு அரிசி உற்பத்தி செய்யும் விவசாயகளின் அபிமானம் கொவி திரிய

விவசாயத்தை வாழ்வாதாரமான கொண்டு நாட்டிற்கே அரிசியை வழங்கும் விவசாயிகளுக்காக HNB கிராமின் நிறுவனம் அறிமுகப்படுத்தும் நிதி உதவிச்சேவையே கொவி திரிய ஆகும். சோற்றை பிரதான உணவாக உட்கொள்ளும் மக்களை கொண்ட நாடாவதுடன், வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இதில் முக்கியமான பிரச்சினையாக அமைவது விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான மூலதன நிதியை தேடிக்கொள்வதேயாகும். இப்பிரச்சினை தொடர்பாக HNB கிராமினின் அவதானத்தை மேற்கொள்ளுதல் தொடர்பாக முதல் செயற்பாடிற்கான வழிகாட்டலாக இருந்தது HNB கிராமின் இன் அம்பாறை கிளையின் கீழ் செயற்படும் தெஹியத்தகண்டிய சேவை நிலையமேயாகும்.



கொவிதிரிய கடன் வசதி தொடர்பான யோசனையை தொஹியத்தகண்டிய கிளையின் மூலம் கோரியதும் எங்கள் உயர் முகாமைத்துவமும் விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டு செயற்படும் மக்களுக்கான கடன் வசதிகள் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுதலை புரிந்து



கொண்டது. கடந்த டிசம்பர் ஒன்பதாம் திகதி இந்த இச் செயற்பாடு கொவிதிரிய எனும் பேரில் புதிய கடன் வசதி திட்டமாக அறிமுகம் செய்யப்பட்டது. கொவி திரிய கடன் வசதி திட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த **HNB கிராமின் நிறுவனத்தின் துணை முகாமையாளரான பெதும் சம்பத் குரே அவர்கள்** இந்த கடன் வசதியானது விவசாயிகளுக்காகவே விசேடமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நெல் பயிர்செய்கையை கருத்திற்கொண்டு ஆரம்ப கட்டமாக 16 பிரதேசங்களை இலக்காக கொண்டு முதல் செயற்பாடாக அம்பாறை, அநுராதபுரம், மஹியங்கனை, பொலன்னருவை, மதவாச்சி, வவுனியா, பதவிய, கந்தலாய், மட்டக்களப்பு, எம்பிலிபிட்டிய, பெலிஅத்த, குருநாகல், கல்கமுவ, அம்பாந்தோட்டை ஆகிய 16 கிளைகளில் கொவி திரிய கடன் வசதி திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.



**HNB கிராமின் நிறுவனத்தின் துணை முகாமையாளரான பெதும் சம்பத் குரே**



அத்துடன் எமது மற்றைய கிளைகளில் இதற்கான தேவை, வேண்டுகோள்களுக்கினங்க இந்த கடன் வசதி திட்டத்தை ஆரம்பிக்க நாம் முடிவு செய்துள்ளோம். சாதாரண மற்றும் நடுத்தர பயிர் செய்கையை கருத்திற்கொண்டு 20000 ற்கும் 50000 ற்கும் இடையில் கடன் வசதி கோர விண்ணப்பதாரிக்கு முடியும். 6 மாதங்களுக்குள் கடன் தொகையை செலுத்தி முடிக்கக்கூடிய வகையில் விவசாயிக்கு மிகவும் இலகுவாக செலுத்தக்கூடிய விதமாக முழு கடன் தொகையில் 30% ஐ முதல் 5 மாதங்களுக்குள் செலுத்தவும் மிகுதி 70% ஐ எஞ்சியிருக்கும் அதாவது ஆறாம் மாதத்தில் செலுத்தக்கூடிய விதத்தில் பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கடன் வசதியை பெற்றுக் கொள்ள 2 பிணையாளர்கள் தேவை 20தொடக்கம் 60 வயதிற்குட்பட்ட விவசாயிகள் கொவி திரிய கடன் வசதித் தொகையை கோர முடியும்.

**மஞ்சுள பிரபாத்**

# சுப மங்களம்

**HNB கிராமின் பினான்ஸ் லிமிடட் இன் அம்பாந்தோட்டை கிளை காரியாலயத்தின் சிறு மற்றும் நடுத்தர கடன் பிரிவில் கடன் அதிகாரியாக கடமையாற்றும் திலிப் ஜந்தன அவர்கள் உர்மி சசிகலா மனுரத்ன அவர்களை தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தது கடந்த டிசம்பர் 02 ஆம் திகதியாகும்.**






**HNB கிராமின் பினான்ஸ் லிமிடட் இன் பிரதான காரியாலயத்தில் கடமையாற்றும் கிளைகள் பிரிவின் முகாமைத்துவரான சனத் பண்டார அவர்கள் நிலீகா சஜீவனி அவர்களுடன் தனது புதிய பாதையை தம்பதிகளாக நவம்பர் 10 ஆம் திகதி மு.ப 9.06 எனும் சுபநேரத்திலேயே ஆரம்பித்தார்.**

**HNB கிராமின் பினான்ஸ் லிமிடட் இன் பிரதான காரியாலயத்தில் கணக்கியல் பிரிவில் துணை கணக்காளராக கடமையாற்றும் கனில் பெரேரா அவர்கள் சஜினி விஜேசிங்க அவர்களுடன் தனது இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தது கடந்த ஒக்டோபர் 21 ஆம் திகதியாகும்.**



**இந்த அழகான தம்பதிகளுக்கு HNB கிராமின் பினான்ஸ் லிமிடெட் இன் முகாமைத்துவ பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபை மற்றும் சகோதர ஊழியர்கள் அனைவரினதும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.**

# கவிதை சாளரம்



## வளர்ச்சியை நோக்கி கிராமின் உடன்

எச்.என்.பி.கிராமின் அதிகாரிகள் அனைவரும் கிராமத்திற்கான வளர்ச்சி
எனும் வடிவில் பயணிக்கின்றனர். அதில் பங்கெடுக்கும் அனுமதியை
எனக்கும் தாருங்கள்

பல ஆண்டுகளுக்கு முன் மதவாச்சிக்கு கடன் கிடைக்குமா என்று ஏக்கத்துடன்
வந்து, மகிழ்ச்சி பொங்க வீடு திரும்பிய ஞாபகம் எனக்கு இன்றும் உள்ளது.

வாகனத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு மதவாச்சிக்கு போனோம்
இப்போது வங்கி கரையைத்தாண்டி வந்துவிட்டது எங்களை தேடி
உறவின் பாலமாய்...

இன்றைய நாள் மகிழ்ச்சியான நாள் என்று மாறுவதற்கு, நமக்கு நல் வழியை
காட்டியதும், மக்கள் நலனில், நலன் ஓம்பும் போக்கை கொண்டதும்
எச்.என்.பி மட்டுமே.

இது வரைகாலம் இதுபோன்ற அனுபவம் பெற்றிருப்பார் பல
நூற்றுக்கணக்கானோர். இன்றைய அறிவுரையில் நானும் பெற்றேன்
பெரியதொரு வாழ்வின் மாற்றத்தை

அறிவை பெற்றுத்தந்த பலுகொல்லவிலிருந்த மூவருக்கும்,
அவர்களின் முன்னேற்றத்துக்கும் இறைவன் துணை

இந்திக சார், மாதவ சார், ருவன் சார் வந்தனர் ஊருக்கு
சுஜித் சார் இப்போ வாரார் நால்வருமே நல்வர்கள் நம் ஊர்
மாற்றத்தின் மாணிக்கங்கள்

வறுமை இருக்கும் நேரத்தில் பெரிய பெரிய முதலாளிகளிடம்
போகத் தேவையில்லை கடவுளாய் கிராமின் இருக்கும் போது

அணியாக சேர்ந்து கடன் பெறுவோம், செலுத்த கூடிய விதத்தில்
துணிச்சலுடன் வளர்ச்சியை நோக்கி கிராமினுடன்

- (கலென் பிதுனு வெவ சேவை நிலையத்தின் பயிற்சி நிகழ்ச்சி முடிவில்
உறுப்பினர் ஒருவரின் மூலம் பாடப்பட்ட கவிதை தொகுப்பு.)

**ஆர். ஏம். குசுமா அதிகாரி**
மத்தியஸ்தான தலைவி பலுகொல்லாகம

## HAPPY NEW YEAR 2017

### இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

*அனைத்து செல்வங்களுடனும் நீண்ட நாள் வாழ்வை வெல்க*
*ஒளிமயம் மிக்க அனைத்து சிந்தனைகளும் இதயங்களில் மலர்க*
*அறிவாற்றல் பெற்று வளமான நிறைவுமிக்க பாதையை அமைக்க*
*பிறந்திரு புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சமான ஒரு ஆண்டாக அமைக*

ஏ.ஏ. சார்லட் விஜயசிறி அங்கத்தவர் , ஹொரணை கிளை

## இமை நின்ற இடங்கள்



சிறு கற்கள் குத்தும் பாதையிலே
நம் சைக்கிள்கள் நாம் அறியாத புது தாளமிட
தனிமைக்கு துணை தேடும் உன்னை,
கொண்டு செல்வேன் என் சின்ன தங்கையே...

ட்ரேகணை போல் புகை விட்டு செல்லும் வாகன சாரதிகள்,
கடிப்பதற்காய் காத்திருக்கும் தெருநாய்கள்
கூட்டமாக கண் இமைக்காமல் பார்த்து நிற்கும் இளைஞர்கள்
இவை அனைத்திற்கும் இடையில் உனக்கு துணை இறைவன்...



திலினி திசாநாயக்க

## மகள் ஆதித்யா

மாணிக்கங்கள் பல கொண்டு
என் சந்தோசப்பாதையில் சல சலத்து
அளவற்ற அன்புடன் கைக்கோர்த்து
எனக்காய் வந்த தேவதையே,
தந்தை எனும் உரிமையை எனக்கு
பெற்றுக்கொடுத்து
சொர்க்கத்தை உலகத்திற்கு கொண்டு
வந்து கலைப்பை நீக்கும் மந்திரம்
மகள் ஆதித்யா

வெற்றி மண்ணின் வெற்றி வாகை சூடி
இசுரு புறத்திற்கு எடுத்து வந்த
என் சின்ன யந்திரம்
மகள் ஆதித்யா



கே.எல். எராஜ் பிராந்திய முகாமையாளர்

## தந்தையே

சூரிய ஒளியை போல் பிரகாசிக்கும்
இரவில் ஒளி தரும் நிலவொளியாய் இருந்து
பகல் வெயில் பாராமல் இரத்தத்தை
வியர்வையாக்கி எம் சந்தோசத்திற்காய்
உழைக்கும் தந்தையே...
நீ இவ்வுலகை எமக்காக வடிவமைத்தாய்
உலகத்தையே மாற்றும் ஒரு ஒளி நீயே
உலகமே உன்னை அறியாவிடினும்
நான் அறிவேன் உன்னை பற்றி
என் அன்புக்கினிய தந்தையே



ஹசிணி நயனதாரா பொன்னம்பெரும
(அனுருத்த பொன்னம்பெரும)

## புலமைப்பரிசில் சித்தி பெற்ற நம் பிள்ளைகள்

கடந்த காலத்தில் வெளிவந்த தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற காரியாலய அங்கத்தவர்களின் பிள்ளைகளை வாழ்த்துகின்றோம். அவர்களில் சித்தி பெற்ற மற்றுமொரு திறமையான மகனின் தகவல்கள் எமக்கு கிடைத்தது. HNB கிராமின் பினேன்ஸ் லிமிடட் இன் சார்பில் பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் அச்செல்லத்தின் தகவல்களை இவ்வாறு வெளியிடுகின்றோம்.



**தீக்ஷன விதுரங்க**
**சுகதபால**
**புள்ளிகள்– 158**
(நிசான்த பிரதீப்
சுகதபால அநுராதபுரம்)



# 2016 HNB

## 2016 HNB கிராமின் ஒன்றுகூடலின் மகிழ்ச்சிமிக்க நினைவுகள்

HNB கிராமின் நிறுவனத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இம்முறை நாவல கொஸ்வத்தை ஒபியுலன்ட் ரிவர் பேஸ் ஹோட்டலில் கடந்த 2016.12.09 ஆம் திகதி இடம்பெற்றது. HNB கிராமின் நிறுவனத்தின் துணை தலைவர் பீ. பிரேமலால், HNB கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத், இயக்குனர் கிரு சாந்தி தம்பையா மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரியலால் அரங்கல ஆகியோரின் கௌரவ பங்குபற்றலுடன் இந்த நிகழ்வுக்காக பிரதி பொது முகாமையாளர்கள், துணை முகாமையாளர்கள், பிராந்திய முகாமை யாளர்கள் உட்பட பிரதான காரியாலயத்தின் அனைத்து ஊழியர்களும் பங்குபற்றினர். இந்த மகிழ்ச்சி மிக்க ஒன்றுகூடலின் HNBபோது நிறுவனத்தின் பல பல பிரிவுகளின் மூலம் அரங்கேற்றிய நிகழ்ச்சிகள் மூலம் இந்நிகழ்வு மேலும் சுவையானது. மாலை முதல் அன்றிரவு வரை நடந்த இந்த மகிழ்ச்சி மிக்க ஒன்றுகூடலின் போதான சுவாரஸ்யமான தருணங்கள் நிர்மான குணசேகர அவர்களின் கெமராவில் பதிவானது இவ்வாறே.


















படப்பிடிப்பு –
நிர்மான குணசேகர

உங்களுக்கு தெரியாத நான்



# கிராமினுக்கு வரும் போது எனக்கு இருந்தது ஒரு சைக்கிள் மாத்திரமே.

**அஜித் பிரியன்த - பிராந்திய கணக்காளர்**

- **முழுப் பெயர்:** கிரிகீகனகே அஜித் பிரியன்த
- **பிறந்த தினம் (விருப்பமெனில்):** 1977.08.23
உங்களுக்கு மிகவும் பிடித்த பாடசாலை காலம்
- **பாடசாலை :** என் தாய் தந்தையின் ஊர் மாத்தறை , தந்தை கடற்தொழில் செய்துதான் எங்களை வளர்த்தார்.1970 ஆம் ஆண்டு அரசினால் கடற்தொழில் செய்யும் அனைவருக்கும் திருகோணமலையில் இடம் கிடைத்தது.நாங்கள் திருகோணமலைக்கு குடியேறிச் சென்றது அப்படித்தான். இன்னும் திருகோணமலையில் வசிக்கும் 90% சிங்கள இனத்தவர்கள் காலி, மாத்தறை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் தான். அதனால் சிறு பராயத்திலிருந்தே அங்கிருந்ததால் என்னுடைய ஊர் திருகோணமலையானது. சிங்கள, தழிழ் மக்களுக்கு மத்தியிலேயே நான் வளர்ந்தேன். நான் முதலில் சென்ற பாடசாலை திருகோணமலை ராஜகீய வித்தியாலோக மகா வித்தியாலயத்திலேயேயாகும். எனது சா/த வரையான கல்வியை அங்கு தான் கற்றேன். பின் அங்கு உ/த விஞ்ஞான பிரிவு இல்லாத காரணத்தினால் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் எனது உ/த ற்காக சேர்ந்தேன்.

## குழந்தை பருவத்திற்கும் இளமை பருவத்திற்கும் இடையிலான இனிய நினைவுகள் என்றும் நீங்காது.

எப்படியானாலும் எனக்கு மிகவும் பிடித்தது ராஜகீய வித்தியாலோக மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற அந்த சிறு பராயத்திற்கேயாகும்.

- **பாடம் :** விஞ்ஞானம்
- **விளையாட்டுகள் :** எல்லே,தட்டு எறிதல் ,குண்டு எறிதல் போன்ற விளையாட்டுகள் எனக்கு பிடிக்கும். பாடசாலை மட்டத்தில் விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிகளை பெற்றுக்கொள்ளவும் என்னால் முடிந்தது.
- **பாடசாலை காலத்தில் எதிர்கால குறிக்கோளாக இருந்தது-** எதிர்காலத்தில் என்ன தொழில் செய்யப்போகின்றேன் என்ற யோசணையும் எனக்கு இருக்கவில்லை.இருப்பினும் திருகோணமலையில் ப்ரீமா, மிட்சுய் போன்ற நிறுவனங்கள் அங்கு இருந்ததால் அந்நிறுவனங்களின் இரசாயன கூடங்களில் ஆய்வு சம்பந்தமான தொழில்கள் செய்ய வேண்டும் என்றும் நினைத்திருக்கிறேன்.
- **முதல் தொழில் மற்றும் மிகவும் விருப்பத்துடன் செய்த தொழில் :-** உ/த பின் எட்டு மாதங்கள் வீட்டிலிருந்தேன்.அந்த நேரங்களில் நான் வீட்டில் சில்லறை கடை ஒன்று செய்தேன். இதன் இடையில் திருகோணமலையில் கணக்காளராக பணிபுரிந்த பிரசன்ன என்னை துணை கணக்காளராக பணியாற்ற அழைத்தார். பண்டாரகமையில் 02 கிழமைகள் பயிற்சியின் பின் 2003 ஒக்டோபர் 13 ஆம் திகதி நியமனம் திருகோணமலை கிளைக்கு கிடைத்தது. அன்று முதல் இன்று வரை கிராமின் நிறுவனத்தில் எனது தொழிலை மிகவும் விருப்பத்துடன் செய்கிறேன்.
- **வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்:-** 2004 சுனாமி பேரலை.அன்று விடுமுறை நாளாக இருப்பினும் நாங்கள் அலுவலகத்தில் இருந்தோம். ஸ்ரீ கந்தன் வந்து கடல் கொந்தளிக்கும் செய்தியை கூறியதும் நாங்கள் பார்ப்பதற்காக சென்றோம். படகுகள் மேலே எழும்பியது, அலையின் வேகம் கூடி கரையை நோக்கி வருவதை கண்டதும் இருக்கும் இடத்தையும், சைக்கிளையும் மறந்துவிட்டு ஒடியது என்றும் மறக்காது.
- **வாழ்வில் மிகவும் சந்தோசமடைந்த நாள் மற்றும் கவலையடைந்த நாள்:-** 2009.10.08 நாள் என்னுடைய மகள் தினெலி ஒனெத்ரா தஹாமிசி பிறந்த தினம் அன்று எனக்கு ஏற்பட்ட சந்தோசத்தை வார்த்தைகளால் கூற முடியாது. இருப்பினும் கவலையான நாள் எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லை.



- **கடந்த காலத்தை செல்லும் வரம் உங்களுக்கு கிடைத்தால் நீங்கள் தெரிவுசெய்யும் வாழ்க்கையின் மிகச்சிறந்த காலம் மற்றும் அதற்கான காரணம் :-** பாடசாலை காலம், அதிலும் சா/த வகுப்பில் இருந்த காலமே. நான் நினைக்கின்றேன் பாடசாலை வாழ்க்கையின் முக்கியத்தை அறியக்கிடைத்த காலத்தை போலவே சிறு பராயம் , இளைய பராயம் என இரண்டிற்கும் நடுவில் கடந்த அந்த காலங்கள் மனதில் இருந்து நீங்காத மிகவும் மகிழ்ச்சி மிக்க காலமாக என் நினைவில் இருக்கின்றது.
- **வாழ்விலிருந்து நீங்கிய பெறுமதிமிக்க மனிதர் மற்றும் சந்தர்ப்பம்: -** அப்படி விஷே டமான மனிதர் மற்றும் சந்தர்ப்பம் என்று எதுவும் இல்லை. நான் எதிர்பார்த்தவை பல எனக்கு கிடைத்துள்ளன.
- **திருத்திக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் திருத்திக்கொள்ளும் உங்களின் பலவீனம்:-** நான் மனிதர்களை மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பேன். அவ்வாறு நம்பிக்கை வைத்து நான் கஷ்டத்தில் விழுந்த சந்தர்ப்பங்கள் பல உண்டு.இருப்பினும் அந்த பலவீனத்தை என்னால் சரி செய்து கொள்ள முடியவில்லை.
- **நீங்கள் நினைக்கும் விதத்தில் அதிகமாக திறமையை வெளிப்படுத்துவது :-** நான் திறமையை வெளிக்காட்டும் துறையிலேயே எனக்கு வேலை கிடைத்துள்ளது.
- **உங்கள் வாழ்வில் நீங்கள் சந்தித்த முக்கியமான நபர், அவரில் நீங்கள் கண்ட விசேடம்சம் :-** அம்மா. அவர் முயற்சிமிக்க தைரியசாலி .சரியான முகாமைத்துவத்துடன் செயற்படும் திறன் அம்மாவுக்கு உண்டு.
- **முதல் காதல் அனுபவம் வாழ்க்கையில் பிரதிபலித்த விதம்: -** பன்சலையில் கண்ட பெண் ஒருவர் மீது எனக்கு விருப்பம் ஏற்பட்டது. அவளுடன் பேசி நான் வீட்டுக்கே சென்று அவளின் தாய் தந்தையிடம் கேட்டேன். எனது அந்த துணிச்சலான செயற்பாட்டின் முடிவானது அவள் என் மனைவி ஆனதே.



- **அவரிடம் நீங்கள் கானும் சிறப்பான விடயங்கள்:-** அவர் தில்ஹாரா செவ்வன்தி. முதலில் அவரின் அழகே எனை கவர்ந்தது. அவளின் புத்திசாலித்தனத்துடன், ஒழுங்கு முறைகளே எனக்கு மிகவும் பிடிக்கும். ஆரம்பத்தில் தொழில் ஒன்றில் ஈடுபட்ட போதும் தற்போது முழு நேரத்தையும் வீட்டுக்காகவே ஒதுக்கிவிட்டார்.
- **உங்கள் வாழ்க்கை தொடர்பாக நீங்கள் திருப்தி அடைகின்றீர்களா?**
நிச்சயமாக, நான் கிராமினுக்கு வரும் போது என்னிடம் ஒரு சைக்கிள் மட்டுமே இருந்தது. இன்று வீடு, வாகனம் என என் வாழ்க்கையை நடாத்திச் செல்ல என்னால் முடிகின்றது. இவை அனைத்தையும் நான் செய்தது நிறுவனத்திற்கு உண்மையாக எனது சேவையை வழங்கியேயாகும். உண்மையாகவே நான் எனது வாழ்க்கை தொடர்பில் திருப்தி அடைகிறேன்.
- **உங்கள் வாழ்க்கையை மாற்றிய திருப்பு முனை :-** கிராமின் நிறுவனத்திற்கு வேலைக்கு வந்தது. எந்தவொரு செயலிலும் சரியாக செய்யும் தகைமை இந்த தொழிலின் மூலம் கிடைத்தது.
- **நீங்கள் உங்களை காண்பது:-** நான் ஒரு அமைதியான கதாப்பாத்திரம். யாருக்கும் உதவி செய்ய விருப்பம். அமைதியாக இருந்து அனைத்து விடயத்தையும் ஆராய மிகவும் பிடிக்கும்.
- **உங்களுக்கு பிடித்த**
- **பாடகர்:** சுனில் எதிரிசிங்க
- **பாடல் :** மே தரம் சியமெலித கலுகல்
- **திரைப்படம்:** The Maze Runner
- **புத்தகம்:** புத்தகம் வாசிப்பது குறைவு
- **எதிர்கால இலட்சியம் :-** யாருக்கும் பிரச்சினை இல்லாமல் குழந்தைகள், மனைவியுடன் சந்தோசமாக இருப்பது.

மஞ்சுள பிரபாத்.

**நேர்மறையாக சிந்திப்பதன் மூலம் அதிக வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.**

# HNB கிராமின் தொடர்பான விடயங்களை மென்மேலும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியுமானால் நான் அதை எனது சமூகப் பொறுப்பாகவே கருதுகின்றேன்.

**-ஸ்ரீயானி கருணாரத்ன-**




ஒன்று சேர்த்த பாலை முறையாக எடுத்து அவற்றை ஒரு பேணியில் சேகரித்து, பால் ஒன்று சேர்க்கும் நிலையத்திற்கு காலையிலேயே கொண்டு செல்லும் மஹிந்த மீண்டும், வீடு வரும் வரை ஸ்ரீயானிக்கு பெரும் பதட்டம் இருக்கும். இன்று சுப நாள் என்பது போல் முகம் மற்றும் உடைகளை உடுத்திக்கொள்ள வரும் யுவதிகளுள் அழுகுசாதன நிலை யம் கொஞ்சம் கூட ஓய்வெடுக்க முடியாது. அதனுடன் மற்றைய காலில் கடைக்கு பொருட்கள் வாங்க வருபவர்களையும் பார்க்க வேண்டிய பொறுப்பும் அவளுக்கே. எவ்வளவு வேலை இருப்பினும் வருபவர்களை வெறும் கையுடன் அனுபப்வும் முடியாது. அது எங்களின் வியாபாரத்திற்கும் பொருத்தமில்லை. ட்ரெக்டரில் ஏறி காலையிலேயே தினமும் வேலைக்கு செல்லும் கணவர் காலை 9-10 மணிக்குள் திரும்பவும் ஒரு முறை வீட்டுக்கு வருவார். இந்த பதட்டத்துடன் ஒரே இடத்தில் இருந்து தனது வேலையை செய்ய அவளுக்கு நேர்ந்தது அவ்விதத்திலேயேயாகும்.

அது அநுராதபுரம் வனமல் கொல்லேவேயில் வசிக்கும் ஸ்ரீயானி கருணாரத்னவின் வழக்கமான வாழ்வாதார செயற்பாடுகளாகும். வாழ்க்கையை வெற்றிக்கொள்ள தைரியத்துடன் போராடும் அவரை கண்டு பேசியவுடன் அவர் கூறியது இவ்வாறு...



எனது ஊர் மதவாச்சியில் ஹெலவகஸ்வெவயில் உள்ள ஒரு கிராமமாகும். என் அப்பா ஒரு வாகன ஓட்டுனர் அம்மா வேலை ஏதும் செய்யவில்லை. மதவாச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஐத வரை நான் படித்தேன். படிப்பு முடிந்த பின் நான் அநுராதபுரம் சென்று அழகுக் கலை தொடர்பான பாடநெறி ஒன்றை ஆறு மாதங்கள் படித்தேன் அந்த நேரத்திலேயே தான் எனக்கு திருமணமும் நடந்தது எனது கணவர் நெல்லே நிறுவனத்தில் பால் போக்குவரத்து பிரிவில் வேலை செய்தார். காலையிலேயே பால் சேகரிப்பு முடிந்து விட்டதால் அதன் பின் அவருக்கு வேலை பெரிதாக இருக்காது. நாங்கள் சிறிதாக ஒரு கடையை ஆரம்பிக்க நினைத்தோம். குடையை ஆரம்பிக்க தேவையான பணத்தை பெற்றுக்கொள்ளத்தான் நான் கிராமின் நிறுவனத்துடன் இணைத்துக் கொண்டேன். அந்த நாட்களில் கிராமின் வங்கக் கிளை அநுராதபுரத்தில் இருந்தது, கனதராவ மத்திய நிலையத்துடன் சம்பந்தப்




பட்டு கடன் தொகையை பெற்றுக்கொண்டேன். கடையை நடாத்திச் செல்லும் போதே, நான் நினைத்தேன் நான் படித்த அழகுக்கலையையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்தேன் கடைக்கு பக்கத்திலேயே 2005 ஆம் ஆண்டு "தில்கி பியுட்டி சலூன்" எனும் பெயரில் என்னுடைய அழகுக்கலை நிலையத்தையும் ஆரம்பித்தேன். அந்த நேரத்தில் இந்தப் பகுதியில் ஒரு அழகுக்கலை நிலையம் கூட இருக்கவில்லை. நான் ஆரம்பித்த அந்த வியாபாரத்திற்கும் உதவியது கிராமின் நிறுவனமாகும். எனக்கு இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கின்றது 10000 ரூபா கடனைப் பெற்று மணமகள் உடை செட் ஒன்று வாங்கியதுடன் இரண்டாம் கடன் தொகையாக 15000 ரூபாவை பெற்று மணமகள் மாலையும் வாங்கினேன்.

அவ் வியாபாரத்தை வெற்றிகரமாக செய்து கொண்டு இருக்கும் போது, எனக்கு தோன்றியது பெட்டரி சார்ஜர் ஒன்றை வாங்க. ஏனென்றால் அந்த காலக்கட்டத்தில் எங்கள் வீட்டுப்பகுதிக்கு மேல் மின்சார வசதி இருக்கவில்லை. அதிகமானவர்கள் தொலைக்காட்சி பார்த்தது கார் பெட்டரியில் தான். நாங்கள் பட்டரி சார்ஜர் ஒன்று வாங்கியதால் அனைவரும் எங்கள் வீட்டுக்கு வந்து சார்ஜ் செய்து கொண்டு சென்றனர். அந்த பெட்டரி சார்ஜரையும் வாங்கியது கிராமின் கடன் தொகையிலாகும். அதன் பின் ரூபா 40,000 மற்றும் ரூ 60,000 போன்ற பெரிய கடன்களை பெற்று எனது வியாபாரத்தை விரிவாக்கிக் கொண்டேன். வாடகைக்கு உத்சவ பொருட்களை கொடுக்கும் நிறுவனத்தை ஆரம்பித்ததும் அவ்வாறே. நான் HNB கிராமினில் ஒரு லட்சம் பெறுமதியான கடன்களை இரண்டு முறை பெற்றுக்கொண்டேன்.

இதே வேலை நான் சேமிக்கும் பணத்தில் ஒரு தொகை யை ஒவ்வொரு வாரமும் பெண்கள் சேமிப்பு கணக்கில் சேமிப்பில் இடும் பழக்கத்தை கொண்டிருந்தேன். அதனால் பெரிய கடன்களை பெற்றுக்கொள்ளும் நேரத்தில் எவ்வித பிரச்சினையும் இன்றி HNB கிராமின் "சிவசக்தி" கடன் முறையின் மூலம் எனது தேவைக்கு ஏற்றவாறு இலகுவாக கடனை பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது.

இப்பொழுது எனது மகளும் அழகுக்கலை பயிற்சி நெறியை கற்கின்றாள். எதிர்காலத்தில் என் வியாபார வளர்ச்சியில் அவளின் ஒத்துழைப்பையும் நான் பெற்றுக்கொள்வேன்.

தமது வியாபாரத்தை மேற்கொள்ள எவ்வித உதவியும் இன்றி ஏம்மைப்போல் சிறு வியாபாரிகள் நாட்டில் அதிகமாக இருக்கின்றார்கள். அவர்களைப் போன்றவர்களுக்கு HNB கிராமின் நிறுவனம் தொடர்பான விடயங்களை அவர்களுக்கு கொண்டு சென்றால் அதை நான் ஒரு சமூக செயற்பாடாகவே கருதுகின்றேன். எனது வாழ்க்கையை இப்படி ஒரு முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல கைகொடுத்த HNB கிராமின் நிறுவனத்திற்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் என்னை போன்ற இன்னும் பல்லாயிரக் கணக்கானவர்களின் வெற்றிப்பாதைக்கு HNB கிராமின் நிறுவனம் கைகொடுக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன் .



தஹாமிசா திசரங்கி
படப்பிடிப்பு– டிசான் சமிந்த

வெற்றிக் கொடியின் அருகில்

# இப்பொழுது இலகுவாக கடனொன்றை பெற ஸ்வசக்தி கடன் திட்டத்தின் மூலம் எங்களால் முடியும்

கடனொன்றை பெற்றுக்கொள்ளும் போது பிணையாளர்கள் அல்லது சொத்துப்பிணை வைக்க வேண்டியது கடன் பெற விரும்புபவர்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய முக்கிய பிரச்சினையாகும். இது போன்ற சந்தர்ப்பங்களில் ஏற்படும் காலத்தாமதம் மற்றும் தேவையற்ற அலைச்சலை குறைக்கும் வகையிலான கடன் திட்டத்தை HNB கிராமின் தற்போது அறிமுகம் செய்துள்ளது. HNB கிராமின் ஸ்வசக்தி கடன் திட்டத்தை பெற்று கொள்ள வேண்டுமாயின், அவர் HNB கிராமின் சேமிப்புக்கணக்காளராக இருப்பதுடன் குறிப்பிட்ட தொகை ஒன்றை தமது கணக்கில் பேணுவது போதுமானதாகும்.
மதவாச்சி புன்சிரி சயிகில்ஸ் வர்க்ஸ் இன் உரிமையாளர் ஏ.ஆர் குமாரசிங்க அவர்கள் எச்.என்.பி கிராமின் நிறுவனத்துடன் இணைந்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் ஒரு வாடிக்கையாளர். அவரது வியாபாரத்தின் வளர்ச்சிக்காக கிராமின் நிறுவனத்திடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு பற்றி எம்மிடம் இவ்வாறு கூறினார்.



ஏ.ஆர். குமாரசிங்க புன்சிரி சைக்கள்ஸ்
கண்டி வீதி, மதவாச்சி

நான் 1973 ஆம் ஆண்டிலிருந்து இந்த வியாபாரத்தை செய்கின்றேன். சைக்கிள் விற்பனை, பழுது பார்த்தல் போன்ற வேலைகளை இங்கே செய்கின்றோம். நான் முதலில் வேறு வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்த போதும் HNB கிராமின் நிறுவனம் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்காக கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின் எனக்கு தேவையான கடன்களை கிராமின் மூலமே பெற்றுக்கொண்டேன். கிராமின் ஸ்வசக்தி கடன் திட்டத்தின் மூலம் இலகுவாக கடன்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. அத்துடன் பெற்ற கடனை செலுத்த கடையை நஷ்டப் படுத்திக்கொண்டு கஷ்டப்படத் தேவையில்லை. கிராமின் இன் அதிகாரிகள் எங்கள் அருகிலேயே வந்து கடன் தவணைத் தொகையை பெற்றுக்கொள்கின்றனர்.

ஆரம்பத்தில் நாம் எங்கள் சகோதரர்களுடன் இணைந்தே வியாபாரத்தை மேற்கொண்டோம். சில காலம் கழிந்ததும் எமக்கு தோன்றிய ஒரு விடயம் நாங்களே தனியாக வடை செய்து விற்பனை செய்தால் நல்லது என்று. கணவரே வியாபாரத்தை பார்த்துக்கொண்டார். நான் அவருக்கு என்னால் முடிந்தவரை உதவி செய்தேன். வியாபாரத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கே நாங்கள் கிராமின் நிறுவனத்தில் தான் கடனை பெற்றுக்கொண்டோம். ஏனெனில் ஒரு நாளைக்கு 35-40 கிலோவுக்கு வடை செய்வோம். நாங்கள் செய்யும் வடையை விற்பனை செய்ய வேறு ஆட்கள் இருந்தார்கள். அவர்கள் டவுனில் பஸ்களில் விற்பனை செய்வார்கள். வடை தயாரிப்பதற்கு எம்மிடம் பலர் இருக்கின்றார்கள். இந்த வியாபாரம் மூலம் 13 பேருக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க எங்களால் முடிந்தது. கடன் தவணையை பெற்றுக்கொள்ளல் மட்டுமின்றி, சேமிப்பிற்கான பணத்தை பெற்றுக்கொள்வதற்கும் கிராமின் நிறுவனம் கையாளும் முறை எங்களுக்கு மிகவும் இலகுவாகும்.



எம்.எம். சாலிகா குடாவெவ, மதவாச்சி

## கடன் ஒன்றை பெற்றுக்கொள்வது மட்டுமன்றி சம்பாதிக்கும் பணத்திற்கு நல்ல வட்டியுடன் சேமிக்கக்கூடிய நல்லதோர் இடம்

ரத்மல் கமயில் வெவ பாதையில் அமைந்துள்ள சிறிய மர ஆலையை பற்றி கேட்டால் ஊரில் உள்ள அனைவருக்கும் தெரிந்த முன்னுதாரணமான விவசாய நிலத்தில் ஜீவனாபோயமாக இதை செய்வதனாலேயேயாகும். ரஞ்சனி மற்றும் அவரின் கணவரும் தமது ஜீவனோபாயத்தை தேடிக்கொள்வது கிராமவாசிகளுக்கு தேவைப்படும் கத்தி, மண்வெட்டி, கோடரி போன்ற பொருட்களை தயாரிப்பதன் மூலமாகும். பத்து வருடமாகின்றது இந்த வியாபாரத்தை ஆரம்பித்து, ஆரம்பத்தில் எனது கணவர் ஆயுதங்களை செய்து சந்தைக்கு கொண்டு சென்று விற்றார். சிறிது காலத்தின்

ஏ.என்.ரஞ்சனி கருவல கஸ்வெவ, கஹடகஸ் திகிலிய





பின் கிராமத்தில் அனைவரும் நம்மை தேடிக்கொண்டு வேலைத்தளத்திற்கே வர ஆரம்பித்ததன் பின் சந்தைக்கு சென்று கஷ்டப்பட்டு விற்க வேண்டிய நிலை மாறியது. கணவர் ஆலையை நடத்திச்செல்லும் நேரத்தில் அதற்கு அருகாமையில் நான் ஒரு தேநீர் கடையை ஆரம்பித்தேன். இவ் அனைத்து வேலையிலும் எமக்கு உதவியாக இருந்தது HNB கிராமின் நிறுவனமே. 2007 ஆம் ஆண்டிலிருந்து இந்த வியாபாரத்திற்கு கிராமின் நிறுவனத்தில் கடனை பெற்றுக்கொண்டேன். 120,000 ரூபாயை நான் கடந்த காலத்தில் கடனாக பெற்றுக்கொண்டேன். எவ்வித கஷ்டமும் இன்றி கடனை பெற்றுக்கொண்டதுடன் நாம் உழைக்கும் வருமானத்திற்கு நல்ல வட்டியையும், சேமிப்பின் போது பெற்றுக்கொள்ள சிறந்த இடமாக நான் நினைப்பது HNB கிராமின் நிறுவனத்தையேயாகும்.

## பெற்றுக்கொள்ளும் கடன் தொகை செலவிலிருந்தே நமது சேமிப்பு தீர்மானிக்கப்படுகின்றது



பீ.எம். சுமித்ரா திசாநாயக்க தம்மென்னாவ சிப்புகுலம

இயற்கை அழகுடன் குளிர்மையான தென்றல் வருட, அவர்களின் வீட்டு முற்றம் ஒரு புதிய அனுபவத்தை தந்தது. வீட்டுச் சுற்றுப்புறத்தை முழுமையான சிவப்பு நிற போர்வை போல் படர்ந்திருந்தது பொன் நிறத்திலான மிளகாய். அதன் நடுவில் வட்டக்காய் செடிகளும் படர்ந்து தோட்டத்தை அழகாக்கி நின்றது.
நாங்கள் 2 ½ ஏக்கர் பயிர்செய்கை செய்கின்றோம். மிளகு, கத்தரிக்காய், பயிற்றங்காய், வாழை, வட்டக்காய் என்பன அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. இந்த பயிர்செய்கைக்கான பணத்தை நாம் பெற்றுக்கொண்டது, ஆறு வருடங்களுக்கு முன் HNB கிராமின் நிறுவனத்திலாகும். முதலில் 40,000 ரூபாவை பெற்றுக்கொண்டேன். பின் 50,000 மற்றும் 70,000 என கடனுதவியை பெற்றுக்கொண்டேன். விளைச்சலை பொருட்டு கடன் தொகையை பெற்றுக் கொள்கின்றமையும் அவ்வாறு பெறும் பணத்தை சரியான விதத்தில் செலவு செய்வதனாலேயும் கடனை சரியான விதத்தில் உபயோகித்து வெற்றிகரமாக வாழ்க்கைக்கு முகம் கொடுக்கக்கூடியதாக உள்ளது.

நமக்கும் ஏதேனும் ஒரு செயலை மிகச்சிறப்பாக செய்யமுடியும் என்பதை மறக்க வேண்டாம்.






# HNB கிராமின் கிளையின் செயற்பாடுகள்



அநுராதபுரம் நகரை தாண்டி யாழ்ப்பாண சந்தியில் திரும்பும் போது எமக்கு அதற்கு பின் காணக்கிடைப்பது சலசலப்பற்ற இன்னொரு பாதையாகும். மதவாச்சிய நகரத்திற்கான வழியை காட்டும் பெயர் பலகைகளை பார்த்துகொண்டு வழி கேட்டுக்கொண்டு முன் நோக்கி செல்லும் நமக்கு மதவாச்சி பிரதான பஸ் நிலையத்தின் முன் இருக்கும் கிராமின் மதவாச்சிய கிளையை கண்டோம்.

மதவாச்சி HNB கிராமின் கிளையொன்று ஸ்தாபிக்கப்பட்டது 2005 ஜனவரி மாதம் 10 ஆம் திகதியாகும். அப்பொழுது மதவாச்சி கிளை மேலாளராக கடமையாற்றியவர் சுரங்க ஹேரத் அவர்கள் இன்று அக்கிளையின் முகாமையாளராவார். அக்காரணத்தினாலேயே அக்கிளையின் கடந்த காலத்தை பற்றி கேட்டறிய அவரை விடுத்து ஒருவர் தகுதியானவர் அல்ல என தோன்றியது. மதவாச்சி கிளையின் ஆரம்பம் தொடர்பாக சுரங்க அவர்கள் எமக்கு தகவல்களை கூறியது இவ்வாறு.


மதவாச்சி கிளை ஊழியர்கள்

மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு டுசான் சமிந்த

மதவாச்சி கிளையின் இயக்கச் செயற்பாடுகளை ஆரம்பித்தது நான் பதுளையிலிருந்து இடமாற்றத்தை பெற்றே இங்கு வந்தேன். நாங்கள் முதலில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து அவ்விடத்திலேயே தற்காலிகமாக எமது கிளையை நடாத்தியதுடன் முதலாவது மத்தியஸ்தளத்தை மதவாச்சி 1 எனும் பெயரில் ஆரம்பித்தோம். மதவாச்சி கிளையின் முதல் காரியாலய மண்டலத்தில் 5 பேர் இருந்தனர். எட்டு மாதங்கள் வரை கடன் உதவிகள் மேற்கொண்டதன் பின் தான் எமது கிளை உத்தியோக பூர்வமாக ஜனவரி 10 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.


காஞ்சன பெலிகும்புர
பிராந்திய முகாமையாளர்

HNB கிராமின் கிளைகளின் பட்டியலில் 36 ஆவது கிளையான மதவாச்சி கிளை மூலம் பரந்து செல்லும் மத்தியஸ்தானங்கள் 205ற்கு தமது சேவையை வழங்குகின்றது. கெவிதிகொல்லேவ, கஹடகஸ்லியத்த, ஒரவ்பதான, திரப்பனே, மின்ஹெட்டிகம, சாலியபுர, வவுனியா வரையிலான பிரதேசங்கள் அதில் அடங்கும்.

அதற்கு மேலாக எமது சேவை நிலையமான கலென் பிபிதுனு வெவ மூலம் கெகிராவை, கன்வல்பொல சந்தி, ஹருலுவெவ, கல்கொல சந்தி வரையிலான


ரணில் பிரசாத் பண்டார
பிராந்திய கணக்காளர்


சுரங்க ஹேரத்
கிளை முகாமையாளர்


எரங்க ஸ்ரீமால்
சிரேஷ்ட ஆய்வாளர்–நிதி மற்றும் நிர்வாகம்


டபுல்யு.சஞ்ஜீவ
பிரதி முகாமையாளர்


தமீத் ரசங்க
கனிஷ்ட பிரதி முகாமையாளர்–நுண்நிதி


நிஷாந்த பிரதீப்
கனிஷ்ட பிரதி முகாமையாளர்–நுண்நிதி

### மதவாச்சி கிளை

| காரியாலய ஊழியர்கள் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | மத்திய நிலையங்கள் |
|---|---|---|
| 22 | 3147 | 205 |



## வாழ்க்கைக்கு தீர்வைத்தேடும் மக்களுக்கு கிராமின் கிளையின் செயற்பாடுகள் கைகொடுக்கும் சந்தோசம் எமக்கு உண்டு...




பிரதேசத்தை உள்ளடக்கி 98 மத்திய நிலையங்களை நடாத்திச் செல்கின்றது. இப்பிரதேச மக்கள் அதிகமாக விவசாய மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வியாபாரங்களையே மேற்கொள் கின்றனர். அதிலும் நெற்பயிர் செய்கை முக்கியமானதாகும். அதற்கும் மேலாக மரக்கறி செய்கை, நன்னீர் மீன்பிடி என்பன பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் வியாபார ங்களுக்கும், மற்றைய தற்காலிக நிர்மாணம் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்களை நடாத்திச்செல்ல எமது HNB கிராமின் நிறுவனத்தில் கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள பெரும் பாலான வாடிக்கையாளர்கள் எம்முடன் இணைந்துள்ளனர். அவ் அனைவருக்கும் எமது சேவைகள் மற்றும் கடன்களை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக பரந்த வேலைத்திட்டங்கள் பலவற்றை நாம் செயற்படுத்துகின்றோம்.

இங்கு கடன் தொகை மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அப்பால் வாடிக்கையாளர்களுக்காக பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் வியாபார நிலையங்களை தேடிக்கொள்ள உதவுதல் போன்ற செயற்பாடுகளும் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றது. எம்மால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகளின் காரணத்தினால் பிரதேசத்தினுள் HNB கிராமின் நிறுவனம் தொடர்பாக மக்கள் மத்தியில் நல்லதொரு அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளமையும் எனது சந்தோஷத்திற்கு முக்கிய காரணமாகும்.

HNB கிராமினின் தொனிப்பொருளான “இருள் நீக்கும் உன்னத பணி” எனும் நோக்கை அடைய முழுமையான சக்தி, நேர அர்ப்பணிப்புடன் செயற்படும் எமது காரியாலய ஊழியர்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெற எம்முடன் நீங்களும் இணைவீர்கள் என்பது எமக்கு உறுதி. HNB கிராமின் கிளைகளின் பட்டியலில் 36 ஆவது கிளையான மதவாச்சி கிளை மூலம் பாரிய அளவில் செய்யப்படும் மத்தியஸ்தானங்கள் 205 இற்கு தனது சேவையை வழங்குகின்றது. கொபிதிகொல்லேவ, கஹடகஸ்லியத்த, ஹொரவிபதான, திரப்பனே, மின்ஹெட்டிகம, சாலியபுர, வவுனியா வரையான பிரதேசங்களின் செயற்பாடுகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.


கலென் பிதுனு வெவ சேவை நிலையத்தின் ஊழியர்கள்


நுவன் சஞ்ஜீவ
பிரதி முகாமையாளர்
கலென் பிதுனு வெவ–
சேவை நிலையம்


சமந்த சந்தன
சிரேஷ்ட ஆய்வாளர்–
நிதி மற்றும் நிர்வாகம்


சந்துன் துசித
பிரதி முகாமையாளர்–நுண்நிதி
கலென் பிதுனு வெவ–
சேவை நிலையம்

### கலென் பிதுனுவெவ கிளை

| காரியாலய ஊழியர்கள் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | மத்திய நிலையங்கள் |
|---|---|---|
| 9 | 1575 | 98 |

**உங்களை விமர்ச்க்கின்றார்கள் என்றால் உங்களுக்குள் விஷேடமான திறமை உள்ளது.**

சிறுகதை



# கல்வி அறிவு

முகில்கள் பரந்த வானில் சென்ற வண்ணம் இருந்தது. குளிர்ச்சியான தென்றல் காற்று மனதை வருடிய வண்ணம் மெதுவாக வீசிச் சென்றது. புறவைகள் கீச்சிட்டுக்கொண்டு பறந்து செல்கின்றது. பயணப்பொதிகளை கையில் ஏந்திய மனிதர்கள் அவசர அவசரமாக மனை நோக்கி செல்கின்றனர். இடைவிடாமல் சென்று கொண்டிருந்த வாகனங்களை பார்த்து கொண்டிருந்த துமிந்த அமர்ந்து, மேற்கை நோக்கி இருந்த சூரியன் மறைய எத்தனிக்கும் நேரத்தில்.

துமிந்தவுக்கு செல்லும் வழியில் சந்திக்க கிடைத்தது டவுனில் தேநீர் கடையின் சோமசிரி மாமாவையே.

“ஆ சின்ன தம்பி என்ன இந்த பக்கம்” என முகம் முழுவதும் புன்னகையுடன் கூறினார்.

“ஆமாம் மாமா வீட்டில் இருக்க சரியான சோம்பலாக இருந்தது. அதுதான் கொஞ்சம் அப்படியே நடந்து விட்டு வரலாம் என்று”

சின்ன தம்பி கொழும்பில் பெரிய கொலேஜ் ஒன்றுக்கு போயும் கூட இன்னும் நல்ல ஒரு வேலை கிடைக்க வில்லை என்ன

“அய்யோ ஆமாம் மாமா இந்த காலத்தில் வேலை தேடுவது சரியான கஷ்டம்”

“மாமாவுக்கு எப்படி? தேநீர் கடை வியாபாரம் எல்லாம்?”

“கை நிறைய என்றால் சரியாக இருக்க முடியாது”

“அது முன் காலத்தில் தம்பி இப்போ அப்படி இல்லை. என் மகள் இரண்டு மகன் என யாருக்கும் இந்த வேலையில் இஷ்டம் இல்லை. பெரிய மகன் வெளிநாட்டுக்கு போய்விட்டான். இரண்டாவது மகன் கார்மன்டில் வேலை. மகளும் டவுனில் கடையில் வேலை. நானும் நோயாளி, இப்போ முன் இருந்தது போல் கஷ்டப்பட்டு தேநீர் கடையில் வேலை செய்யவும் முடியவில்லை. நான் யோசிக்கிறேன் அந்த கடையையும் நல்ல விலைக்கு விற்று விட்டு ஊருக்கே போய்விடலாம் என்று”

“ஊருக்கு போக? ம்ம் மாமா தேநீர் கடையை விற்பனை செய்கின்றீர்கள் என்றால் நான் கடையை வாங்கிக்கொள்கின்றேன். நான் சேர்த்து வைத்த காசு கொஞ்சம் இருக்கின்றது. இந்த பக்கம் வேறு எங்கேயும் தேநீர் கடைகளே இல்லாததால் என்னால் முடியும் இதை செய்ய”

“என்ன பேசுறீங்க தம்பி? சின்ன தம்பி தேநீர் கடை செய்ய போறீங்களா?”

“என்ன செய்ய? நானும் மாமா செய்த வேலையை செய்வேன், இருந்தாலும் மாமா செய்த மாதிரி இல்லை கொஞ்சம் புது விதத்தில்”

“அய்யோ தம்பி செய்ய முடியாத வேலையை செய்ய வேணாம். தம்பியின் அப்பா பற்றியும் எனக்கு தெரியும். சொந்தகாரர்கள் பற்றியும் எனக்கு தெரியும். நான் தம்பியின் வீட்டில் சமைத்து தந்தவன், உங்களுக்கு முடியுமா ஊர் ஆட்களுக்கு தேநீர் செய்ய”

